| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **239/2021** |
| **DATE** | : | **06.06.2026** |
| **பெயர்** | : | **சேகர்** |
| **தந்தை பெயர்** | : | **கண்ணன்** |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2. நான் எனது மகன் 2வது பிரதிவாதிக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் பைனான்ஸ் தொழில் தற்போதும் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கே பைனான்ஸ், சீட்டு விடுவது தான் தற்போது தொழில் என்று சொன்னால் சரியல்ல, முன்பு செய்திருந்தோம். கிராம சமுதாய அறக்கட்டளை என்று ஒன்று கிடையாது என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

3. கிராம சமுதாய அறக்கட்டளை என்பது சுமார் 100 வருடங்களுக்கு மேல் இயங்கி வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அது 2018ல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. 2018ல் இருந்து சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் ஏற்றுக் கொள்கிறேனா என்றால் இல்லை. கோவிந்தசாமி என்பவர் இந்த சங்கத்திற்கு சுமார் 30,40 வருடங்களாக தலைவராக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

4. வா.சா.ஆ.14 மின் இணைப்பு அட்டையில் தாவா சொத்திற்கு மின் இணைப்பு டிரஸ்டி கிராம சமுதாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணங்களில் கோவிந்தராஜ முதலியார், டிரஸ்டி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அதனால் மேற்படி கோவிந்தசாமி முதலியார் தான் அறக்கட்டளையின் தலைவராக இருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் சாட்சி தானாகவே முன்வந்து 1963ல் ஒரு

அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது அதில் தாவா சொத்து காண்பிக்கப்படவில்லை தாவா சொத்து கிராம சமுதாயம் என்று தான் வருகிறது என்று சொன்னார்.

5. வா.சா.ஆ.12 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு 1972லேயே கோவிந்தராஜ் முதலியார் இறந்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவிந்தராஜ் முதலியாரை எனக்கு தெரியும். அவர் டிரஸ்டிற்கு தலைவராக இருந்தாரா என்ற விவரம் தான் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 1972ல் கோவிந்தராஜ் முதலியார் இறப்பதற்கு முன்பு வரை 30 ஆண்டகள் அவர் தான் அறக்கட்டளையின் தலைவராக இருந்தார் எனக்கு விவரம் தெரிந்தும் வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்தில் கடை வைத்து நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு கடைகள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சாட்சியிடம் வா.சா.ஆ.15 ஆவணம் காண்பிக்கப்பட்டது. அதில் முதல் புகைப்படம் நுழைவுவாயில் என்றால் சரிதான், இரண்டாவது புகைப்படம் கடைகள் என்றால் கடைகள் இடிந்து போய் இருந்தது சரிதான். 2020ல் குத்தகை ஆவணம் எழுதப்பட்டது அதற்கு முன்பு வரை மேற்சொன்ன கடைகள் அங்கு தொழில் நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் 2015 வரை கடை இருந்தது. அந்த கடைகளில் ஒரு கடையில் தான் கிராம சமுதாய அறக்கட்டளையின் அலுவலகம் அமைந்திருந்தது என்றால் சரிதான். மற்ற இரண்டு கடைகளில் ஒன்றில் விறகு கடையும் மற்ற ஒன்றில் மரக்கடையும் அமைந்திருந்தது என்றால் சரியல்ல, அங்கு ஒரு ஓட்டல் இருந்தது.

7. பி.வா.சா.ஆ.1 ஆவணம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன் எனக்கு உறவு இல்லை, ஒரே தெருவை சேர்ந்தவர். அவரும்

வாதி அறக்கட்டளைக்கு எதிராக தான் போராடுகிறார் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன் சாட்சி சொல்ல வருவாரா என்றால் அவர் தற்போது இறந்துவிட்டார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து கிராம சமுதாயம் என்று தாக்கலாகி உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இடத் ரயத்துவாரி மனை என்று குறிப்பிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து கிராம சமுதாய வகைப்பாட்டை சேர்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிராம சமுதாய வகைப்பாடு இருப்பது என்பதை காட்டுவதற்காக வேறு ஏதாவது சொத்தின் வருவாய் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அவ்வாறு ஒரு வகைப்பாடு உள்ளது என்பதற்கு அரசாணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. தாவா சொத்து ரயத்துவாரி மனை அரசுக்கு சொந்தமானது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கணேச முதலியார் என்பவரும் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் சேர்ந்து கிராம சமுதாய அறக்கட்டளையை மோசடியாக உறுவாக்கியுள்ளார்கள் என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.02.2018 வா.சா.ஆ.3 ஆவணம் தவறு என்பதால் தான் அவ்வாறு தெரிவிக்கிறேன். வாதி அறக்கட்டளையில் உள்ளவர்கள் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் ஆகவே அவர்கள் இந்த மோசடி வேலையில் சேர்ந்து ஈடுபட்டுள்ளார்கள். நானும் அதே சமுதாயத்தை சேர்ந்தவர் தான்.

9. தாவா சொத்தின் தற்காலிக சந்தை மதிப்பு சுமார் 15 கோடி இருக்கும் என்று தெரிவித்துள்ளேன் அதை காட்டுவதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆதாயத்திற்காக நான் தவறுதலாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் திருமண மண்டபம் கட்டக்கூடாது என்று நான் மாநகராட்சிக்கு மனு கொடுத்திருந்தேன். எதன் அடிப்படையில் மேற்படி மனு கொடுத்தேன் என்றால் தாவா சொத்து

கிராமத்தில் உள்ள அனைவருக்கும் சொந்தமான கிராம சமுதாய சொத்து அதில் ஒரு சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்காக கட்டிடம் கட்டக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தேன்.

10. வாதி அறக்கட்டளை கட்டும் கட்டிடம் முதலியார் சமுதாயத்திற்கு மட்டும் உரியது என்று அவர்கள் வாய்மொழியாக தெரிவித்துள்ளார்கள். நான் சொல்வதுபோல் வாதி அவ்வாறு எதுவும் தெரிவிக்கவில்லை வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வாய்மொழி விவரத்தை 3ம் தரப்பினர் சாட்சியம் மூலமாக என்னால் நிருபிக்க முடியுமா என்றால் முடியும். மாநகராட்சியை இவ்வழக்கில் மனுவின் அடிப்படையில் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளோம். தாவா சொத்து மாநகராட்சிக்கு சொந்தமானது என்பது தான் மனுவின் சாராம்சம். ஆனால் மாநகராட்சி தரப்பில் தோன்றாதரப்பினர்கள் ஆகிவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் மாநகராட்சிற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் தான் தோன்றாதரப்பினர்கள் ஆகிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

11. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து அரசாங்க சொத்து அரசு அதிகாரிகளை விசாரிக்க வாதிகள் தவறிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் நான் சொல்வது தவறு தாவா சொத்து கிராம சமுதாய அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கிராம சமுதாய அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்து என்பதை காட்டுவதற்கு வா.சா.ஆ.5,13,14 மின்சார கட்டண ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.6-8 முதலான சொத்து வரி ஆவணங்கள் வாதி பெயரில் தாக்கலாகி உள்ளது என்று சொன்னால் சொத்தை அபகரிப்பதற்காக தவறாக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள்.

12. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்து கிராம சமுதாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து கிராம சமுதாய சொத்து என்று

நிருபித்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள புகார் என்ன நிலையில் உள்ளது என்றால் மாவட்ட பதிவாளர் அவர்கள் மீது போலி ஆவணம் தயார் செய்ததற்காக குற்றவியல் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். மேற்படி உத்தரவு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் உத்தரவு எதுவும் கிடையாது தாவா சொத்து வாதியின் சொத்து என்று மேற்படி புகார் ஏற்கனவே முடித்துக் கொள்ளப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN